

நான் ஒரு கைகடிகாரம்

சிறியவர் முதல் பெரியவர் வரை என்னைக் கைகளில் _____ கொள்வார்கள். அவர்களுக்கு நான் பெரும் பயன் தருவேன். நேரம் என்ன என்று மனிதர்களுக்குத் தெரியாவிட்டால், உடனே என்னைப் _____. ஆம் நாந்தான் கைகடிகாரம்.

என் பெயர் 'போர்னியோ'. நான் ஜப்பானில் உள்ள _____ ஒன்றில் பிறந்தேன். பின்னர், மலேசியா, சிலாங்கூர் மாநிலம் காஜாங் நகரில் அமைந்துள்ள பிரபல கடிகாரக் கடைக்கு விற்பனைக்காக _____.

என்னைப் போலவே அங்கு நிறைய நண்பர்கள் இருந்தனர். நாள்கள் _____. ஒரு நாள், இளைஞர் ஒருவர் நான் விற்பனைக்கு இருந்த பகுதிக்கு வந்தார். என்னைப் பார்த்ததும் அவர் முகம் _____. அவர் என்னை வாங்க எண்ணினார்.

அவர் அணிந்து பார்த்தார். என்னை அணிந்தவுடன் அவரது முகத்தில் ஒருவித மகிழ்ச்சி _____. கடைக்காரரிடம் பணத்தைச் செலுத்தி என்னை வாங்கிச் சென்றார். அவர் நண்பர்கள் எனது தரத்தையும் அழகையும் பற்றிப் புகழ்ந்து _____. அதனைக் கேட்டு என் எஜமானர் உச்சி குளிர்ந்தார்.

என் எஜமானர் என்னை மிகவும் கவனமாகப் பயன்படுத்தி வருகிறார். நான் எனது _____ மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறேன். என் ஆயுள் காலம் வரை என் _____ ஓயாமல் உழைப்பேன்.

தொழிற்சாலை	அணிந்து	பேசினார்கள்	உருண்டோடின	அனுப்பப்பட்டேன்
நிழலாடியது	மலர்ந்தது	எஜமானருக்கு	பார்ப்பார்கள்	வாழ்க்கையை

LIVEWORKSHEETS